1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தொகுதியிலேயே ஒரு தொடக்கக் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் உர மூட்டையைக் கடத்துகிற போது பொதுமக்கள் தடுக்க, டிராக்டரைக்கொண்டு அவர்களைக் கொலை செய்தார் என்று இந்த அவையில் நீங்கள் பிரச்சினை எழுப்பியபோது அன்றைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் சங்கச் செயலாளர் ஆகவும் ஊழியராகவும் இருப்பவர்களை ஒரு சங்கத்திலிருந்து மற்றொரு சங்கத்திற்கு மாறுதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தரவாதத்தை இந்த அவையிலேயே தந்தார்கள். அந்த உத்தரவாதம் நிறைவேற்றப் படவேண்டுமானால் தொடக்க கூட்டுறவு வங்கி ஊழியர்கள் என்ற நிலையிலிருந்து மாற்றி மத்திய வங்கி ஊழியர்கள் அல்லது அரசு ஊழியர்கள் என்று மாற்றினால்தான் தவறு செய்பவர்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்ற இயலும். ஆகவே அந்த வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கருத்து நம்முடைய அவையில் சொல்லப்பட்டு இப்போது இந்தத் துறையில் பரிசீலனையில் இருக்கிறது. 'காமன் கேடர்' ஏற்படுத்துவது பற்றி அதற்காக ஒரு குழுவை நியமித்திருக்கிறோம். அந்தக் குழு, அவர்களின் பணி நிலைகள், மற்றும் சம்பள விகிதங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு செயல்படும். அந்தக் குழுவின் பரிந்துரைக்குப் பின்னால் அதனுடைய விபரங்கள் இந்த அவைக்குத் தெரிவிக்கப் படும், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 587, திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

587—

பச்சிளம் குழந்தைகளுக்கு சத்துணவு.

*96—திரு. டி. எம். ரங்கராஜன் :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முதல் அமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பச்சிளம் குழந்தைகளுக்கும் (Children of Tender Age) சத்துணவு வழங்கிட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1992 ஏப்ரல் 21

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த வினாவில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று வினா எழுப்பப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தபோது முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று பெயர் வைத்தார்கள். முதலமைச்சர் என்று சொன்னாலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயர்தான் நினைவுக்கு வருகிறது என்ற காரணத்தினால், இரண்டாண்டுக்கால அராஜக ஆட்சியில் கருணாநிதி அவர்கள் அந்தப் பெயரை மாற்றி, தமிழக அரசு சத்துணவுத் திட்டம் என்று பெயர் வைத்தார்கள். ஆனால் எங்கேயும் எதிலேயும் எப்போதும் எம்.ஜி.ஆருடைய பெயர் உச்சரிக்கப்பட வேண்டுமென்று தமிழகத்தின அரசியல் வானில் துருவ நட்சத்திரமாக விளங்குகிற நம்முடைய ஒப்பு உயர்வு இல்லாத தலைவி புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள். ஆகவே வினாவை 'புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்தின் கீழ்' என்று மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) : இந்த வினாவுக்கான விடை, ''ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் மூலமாக 6 மாதம் முதல் 3 வயது வரையிலும் உள்ள ஊட்டச் சத்துகுறைாவன குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு வழங்கப் படுகிறது'' என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா, இந்தப் பெயர் மாற்றம் செய்வதற்கு முன்பாகவே எழுப்பப்பட்ட வினா என்பதைத் தெரிவித்துக் கொண்டு ,மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்னார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எந்த விதமான சத்துணவு வழங்கப்படும், 'ஃபாரெக்ஸ்' போன்ற ஊட்டச் சத்துக்கள் வழங்கப்படுமா, அது எங்கு, எவ்வாறு வழங்கப்படும் என்பதையும், அதற்காகும் செலவு என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாரெக்ஸ்' போன்றவைகளில் என்னென்ன கலக்கப்பட்டு இருக்கிறதோ அவையனைத்தும் கலக்கப்படுகின்ற வகையில், கோதுமை, ராகி, பருப்பு, சோயா மாவு, வெல்லம், வைட்டமின் சத்து ஆகியவை கலந்த புரதச் சத்து நிறைந்த ஊட்டச்சத்து மாவு ஒவ்வொரு எடை குறைந்த குழந்தைக்கும் தினந்தோறும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு

1992 ஏப்ரல் 21]

ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ் 1.96 லட்சம் குழந்தைகளும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1.30 லட்சம் குழந்தைகளுக்கும் இதிலே பயன் ஏற்படுகின்றன, இதற்காக 20 மாவட்டங்களில 80 திட்ட அலுவலகங்ளைக் கொண்ட 7,061 குழந்தைகள நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1-8-1991 முதல் மேலும் 30 வட்டாரங்களுக்கு இது விரிவு படுத்தப்பட்டிருக்கிறது. இதற்காகும் செலவு குறித்து, தனிக் கேள்வி போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 588, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

588—

அரசு உறைவிடப் பள்ளிகளில் சத்துணவு மையங்கள் அமைத்தல்.

*812— திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் காக்காயனூர், குட்டையூர் போன்ற இடங்களில் திறக்கப்பட்ட மலைவாழ் மக்கள் அரசு உறைவிடப் பள்ளிகளில் சத்துணவு மையங்கள் அமைக்க அரசு முயலுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் திறக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிய சத்துணவு மையங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர், விடுதலை வீரர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த மாவட்டத்தினுடைய கடைசிப் பகுதியாக இருக்கின்ற ஊர்தான் குட்டையூர், காக்காயனூர் என்ற மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். இந்த ஊரிலே ஆதிதிராவிடர் மற்றும் ஆதிவாசிகளுக்காக இரண்டு பள்ளிகள் கடந்த ஆண்டு நான் வணங்கும் இதய தெய்வம், அம்மா, டாக்டர் அவர்களுடைய ஆட்சியிலே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளியிலே ஆதிவாசிகள் அல்லாத மற்றஇதர ஜாதியினர் அந்த ஊரில்